

## வறட்சி காலத்திலும் வளமான விவசாயம்.. சாத்தியமாக்கிய மழைநீர் சேகரிப்பு..!

25.04.2013



இயற்கை, மனிதனுக்கு அள்ளிக்கொடுத்த அருட்கொடைகளுள் அற்புதமான ஒன்று… தண்ணீர். ஆனால், அதை விவசாயிகளில் பலரும் முறையாகப் பயன்படுத்த இன்னமும் கற்றுக் கொள்ளாமலிருப்பதுதான்.. வறட்சி காலத்தில் ஒரேயடியாக அவர்கள் வாடிப் போக மிக முக்கிய காரணமாக இருக்கிறது! தண்ணீரை மட்டும் முறையாக மேலாண்மை செய்துவிட்டால்… நிச்சய வெற்றிதான். இந்த வித்தையைக் கைவரப் பெற்றவர்கள் இங்கே வெகு குறைவே! அவர்களில் ஒருவராக அசத்திக் கொண்டிருக்கிறார் 'அத்திமாஞ்சேரி' சித்தம்மா!
திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி – பள்ளிப்பட்டு சாலையில் இருபத்தி இரண்டாவது கிலோ மீட்டரில் ஆந்திர மாநில எல்லையையொட்டிய பகுதியில் இருக்கிறது. அத்திமாஞ்சேரி. ஊரைச் சுற்றி மலைகள்தான். ஆனால், பெரும்பாலும் வறண்ட பிரதேசமாகவே காட்சியளிக்கின்றன. இங்கே, உள்ள காந்தி நகரில் இருக்கும் மலைகளுக்கு இடையில் நீண்டு கிடக்கிறது. சித்தம்மாவின் வயல்வெளி.
கர்நாடக மாநிலம், சித்ரதுர்கா பக்கம் இருக்கு சிவகங்கா. இதுதான் என்னுடைய சொந்த ஊர். சின்ன வயதில் ஒரு விபத்தில் சிக்கி, முகத்தில் பலமாக அடிபட்டு, ஒரு பக்க பார்வை போய்விட்டது. இப்பவும், செயற்கைக் குழாய் மூலமாகத்தான் மூச்சு விட்டுக்கொண்டிருக்கிறேன். சிகிச்சை எடுப்பதற்காக சென்னைக்கு வந்தேன். இங்கேயே தங்கிவிட்டேன். ஆரம்பத்தில் இந்தப்பகுதியில் என்னால் முடிந்த வேலைகளை செய்ய ஆரம்பித்தேன். இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரோட வழிகாட்டுதல் படி இந்த 13 ஏக்கர் நிலத்தை 'மாதிரிப் பண்ணை'யாக மாற்றியிருக்கிறேன்.
முழுசாக இயற்கை முறை விவசாயம்தான் செய்கிறோம். மூன்றரை ஏக்கர் நிலத்தில் வெள்ளைப் பொன்னி அறுவடைக்குத் தயாராக இருக்கிறது. ஒன்றரை ஏக்கர் நிலத்தில் சோனா ரக நெல் இளம்பயிராக இருக்கிறது. 2 ஏக்கரில் நிலக்கடலை, 1 ஏக்கரில் உளுந்து, ஒன்றரை ஏக்கரில் துவரை, 25 சென்டில் மக்காச்சோளம், 25 சென்டில் முள்ளங்கி, தக்காளி, 20 சென்டில் வாழை என்று இருக்கிறது. இதுபோக, 500 தென்னை, மா, கொய்யா, பலா, எலுமிச்சை என்று மரங்களும்… வீடு, பண்ணைக்கான கூடம் என்று எல்லாமும் இருக்கு என்றார். தண்ணீர் வளம் அவ்வளவாக இல்லாத இந்தப் பகுதியில், இதையெல்லாம் சாத்தியமாகியது

எப்படி? என்று கேட்டோம்.தொழில்நுட்பத்தகவல்களை கூறினார்.
ஏழு வருடத்திற்கு முன் இந்த நிலத்தை வாங்கினேன். அப்போது, 3 ஏக்கர்தான் விவசாயம் செய்வதற்கு ஏற்ற நிலமாக இருந்தது. மற்றதெல்லாம் காட்டுப் புல் மண்டி புதராகத்தான் இருந்தது. அதையெல்லாம் அழித்து, சமன்படுத்தி உழுது சாகுபடிக்கு ஏற்ற நிலமாக மாற்றியிருக்கிறேன். நிலம் தயார் ஆனதும், அடுத்து செய்த வேலை.. தண்ணீர் சேமிப்புதான். என்னுடை நிலத்தைச் சுற்றி இரண்டு பக்கமும் மலை. அடிவாரத்தில் நிலம் இருப்பதால், மலையில் பெய்யும் மழைத்தண்ணீர், இந்த வழியாகத்தான் ஓடையில் ஓடும். இதை முறையாக பயன்படுத்துவதற்கான வேலைகளில் இறங்கினேன்.
நிலத்துடைய ஒரு பக்கம் 5 அடி ஆழம் மூன்றடி அகலத்தில் அகழி மாதிரி பள்ளம் பறித்திருக்கிறேன். அங்கங்கே அகலமான குழிகளையும் எடுத்திருக்கிறேன். மலையிலிருந்து இறங்கும் மழைத்தண்ணீர், இதில் சேகரமாகிறது. பள்ளம் தோண்டினப்போது எடுத்த மண்ணை வரப்பு மேல் போட்டு, 180 தேக்கு மரங்களையும், நாவல் மரங்களையும் நட்டுவிட்டேன். மறுபக்கம் மலையிலிருந்து இறங்கும் தண்ணிர்... ஓடை வழியாக போகிறது. அங்கேயும் 4 தடுப்பணைகளை கட்டி தண்ணீரை சேமிக்கிறேன். இதனால், நிலத்தடி நீர்மட்டம் கூடியிருக்கு. எந்த இடத்தில் போர்வெல் போட்டாலும், 100 அடியில் தண்ணீர் கிடைக்கும். இதையெல்லாம் செய்தபிறகுதான் விவசாயத்தையே ஆரம்பித்தேன் என்கிறார் சித்தம்மா.
நிலத்தை நன்றாக உழுது, நிலக்கடலை. உளுந்து, காராமணி, சிறுதானியங்கள் என்று நிலத்தை வளமாக்கும் பயிர்களை மட்டும் முதல் மூன்று வருடம் போட்டேன். அதில் ஓரளவிற்கு வருமானம் கிடைத்தது. தொடர்ந்து உழவு ஓட்ட ஓட்ட... காட்டுக்களைச் செடிகள், புல் வகைகள் எல்லாம் சுத்தமாக இல்லாமல் போய்விட்டது. அதன் பிறகு ஒற்றை நாற்று முறையில் நெல் சாகுபடியை ஆரம்பித்தேன்.
இடைவெளி மந்திரம்!



எந்தப் பயிராக இருந்தாலும், நல்ல இடைவெளி கொடுத்து விதைத்தால்.. பரந்து செழிப்பாக வளரும். நிறை விதைகளை நெருக்கிப் போட்டால், கூடுதலாக விளைச்சல் கிடைக்கும் என்று தனர் பலரும் நினைக்கிறாங்க. அது தவறு. பரவலாக இடைவெளிவிட்டு போடும் போதுதான் நல்ல

விளைச்சல் கிடைக்கும். அதில்லாமல் பூச்சித்தாக்குதலும் பெரிதாக இருக்காது. இயற்கை முறைப்படி சாகுபடி செய்ய வேண்டும் என்று முடிவெடுத்த பிறகு, பாரம்பரிய முறைகளையும் சேர்த்துக் கொண்டேன். மாடு ஏர் பூட்டி பாரம்பரிய முறைப்படிதான் உழவு, களை எல்லாம்எடுத்துக் கொண்டிருக்கிறேன். கர்நாடகாவில் இப்படித்தான் களை எடுப்பாங்க. கம்பு, மக்காச்சோளம், காய்கறிகள், நிலக்கடலை என்று எல்லா வயல்களிலும் அதிக இடைவெளி கொடுத்து விதைப்பதால், சுலபமாக மாடுகளை ஓட்டிடலாம்.

அதேமாதிரி, குதிரில்தான் நெல்லை சேமித்து வைக்கிறேன். ஒரு குதிரில் 10 மூட்டை நெல்லை சேமித்து வைக்க முடியாது. குதிரில் நெல்லைக் கொட்டி வைத்து கீழே இருக்கும் ஓட்டை வழியாக தேவைப்படும்போது எடுத்துக் கொள்ளலாம். இது 1,500 ரூபாய் விலைக்கே கிடைக்கிறது.

வரப்பில் மரங்கள்! வரப்பில் தென்னை, மா, கன்றுகளை நட்டிருக்கிறேன். இது பெரிதாக வளர்ந்து வந்தாலும்.. நிலத்தில் செய்யும் வெள்ளாமைக்கு எந்த பாதிப்பும் வராது. 5 வருடம் கழித்து இதிலும் ஒரு வருமானம் கிடைக்க ஆரம்பிக்கும். கேழ்வரகு, வேர்க்கடலை, உளுந்து, எள், கம்பு என்று போடும் நிலங்களில் வரப்பு முழுவதும் மரக்கன்றுகளை நட்டுவிட்டேன். இதை ஒரு பரிசோதனையாகத்தான் செய்திருக்கிறேன். வரப்புகளில் வளர்வதைத் தவிர… 6 எலுமிச்சை, 15 கொய்யா, 8 மா. 10 பலா, 3 சீதா, ஓரத்தில் மூங்கில் மரங்களும் வளர்ந்து கொண்டு வருகிறது. எல்லாவற்றிற்கும் 3 வயதுக்கு மேலாகிறது. நான் நிலத்தை வாங்கும்போதே 200 தென்னை மரங்கள் இருந்தது. நான் வைத்த 300 கன்றுகளையும் சேர்த்து, இப்போது மொத்தம் 500 தென்னை மரங்கள் இருக்கிறது.

மாடுகள் மூலம் உரத் தொழிற்சாலை!

சாணிக்காகவும், கோமூத்திரத்துக்காகவும் 10 மாடுகளை வளர்க்கிறேன். இதுதான் என்னுடைய நிலத்திற்கு உரம். மாடுகளை மேய்ப்பதற்காக ஒரு ஆளை வைத்திருக்கிறேன். அவர், மாடுகளைப் பராமரிப்பதற்குக் கூலியாக… பாலை எடுத்துக் கொள்வார். சாணியும், கோமூத்திரமும் எங்கள் நிலத்திற்கு! 300 சதுரடியில் 3 அடி ஆழத்திற்கு குழி தோண்டி, சாணியை அதில் போட்டுவிடுவோம். மாட்டுக் கொட்டகையிலிருந்து பைப் மூலமாக கோமூத்திரம் அந்தக் குழிக்கு வந்துவிடும். இந்தக் கரைசலை எடுத்து பெரிய டிரம்மில் ஊற்றி தண்ணீர் கலந்து, வைத்துவிடுவோம். 5 நாள் கழித்து எடுத்து வாய்க்கால் வழியாக பயிர்களுக்கு விட்டுவிடுவோம். இதைத் தவிர, வேறெதையும் பயிர்களோட ஊட்டத்திற்காக பயன்படுத்துவதில்லை. பூச்சி தாக்குதல் இருந்தால்… இலை..தழைகள், கோமூத்திரம், பால்,தயிர் எல்லாவற்றையும் கலந்து ஊறவைத்து, ஸ்பிரேயர் மூலமாக தெளித்துவிடுவேன். அதுதான் எங்களக்கு பூச்சிவிரட்டி என்றார். இந்த ஏழு வருடத்தில், 4 லட்ச ரூபாய்க்கு மேல் செலவு செய்திருக்கிறேன். மூன்று வருடமாகத்தான் கொஞ்சம் கொஞ்சமாக வருமானம் கிடைக்க ஆரம்பித்திருக்கு. இன்னும் 3 வருடத்தில் செலவு செய்த முழு பணத்தையும் எடுத்திடுவேன். அதற்கு மேல் கிடைப்பதெல்லாம் லாபம்தான்.

இது, அபரிதமாக தண்ணீர் கிடைக்கும் பகுதி கிடையாது. இப்படிப்பட்ட இடத்தில், இந்த அளவிற்கு வெற்றிகரமாக விவசாயத்தை நடத்துவதற்கு அடிப்படைக் காரணமே.. தண்ணீர்தான். இது இல்லாமல்தான் இந்த வருடம் தமிழ்நாடு முழுக்கவே பல இடங்களில் விவசாயம் அத்துப்

போச்சு.

எங்க பகுதியிலும் இதே நிலைதான். ஆனால், முறையாக நிலத்தடி நீரை அதிகப்படுத்தினதால்.. இந்த வறட்சியிலும் என்னுடைய வயலில் வெள்ளாமை விளைந்திருக்கிறது என்றார். தொடர்புக்கு

சித்தம்மா, செல்போன் : 98840 80048

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 10.04.13 www.vikatan.com**